**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC.270 /2023**

**Deposition of P.W.** 1

Name : திரு. ரமேஷ்
S/o, D/o, W/o : ஐயப்பன் பிள்ளை
Village :
Taluk :
Calling :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 22.**10.2025

**Accused** absent. peittion filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது பரசேரியில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 19.06.2023ம் தேதி 14.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும் போது நெய்யூர், மேல்கரை காசிநாடார் மகன் சிவகுமார் என்பவர் கொடுத்த தகவல் படி தலைமைக்காவலர் 227 திரு.சைலின் ஜெயசுபின் பெண் முதல்நிலை காவலர் ஷீஜா, பெண் முதல்நிலை காவலர் ராகி ஆகியவர்களுடன் 14.30 மணிக்கு முளகுமூடு, மிங்காரவிளை அனிதா என்பவர் வீட்டிற்கு முன்பாக சென்று அங்கு நின்று கொண்டிருந்த ரவீந்திர நாயர் என்பவரை விசாரித்து மேற்படி வீட்டை சோதனை இட்ட போது அந்த வீட்டில் ஷோபா மோள் , சக்தி, என்ற இரு இளம்பெண்கள்

அறையில் அரைகுறை ஆடைகளுடன் இருந்தனர். அவர்களை விசாரணை செய்த போது ரவீந்திரன் நாயர் மேற்படி பெண்களை வைத்து விபசார தொழில் செய்து பிழைப்பு நடத்தி வருவதாக கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டனர். மேற்படி ரவீந்திரன் நாயரை 15.00 மணிக்கு கைது செய்து அவரை எவ்வித துன்புறுத்தலும் இன்றி அவராக கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தை 15.30 மணி வரை தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் போலீசார் சாட்சிகளாகிய தலைமைக்காவலர் சைவின் ஜெபசுபின், பெண் முதல்நிலைகாவலர்கள் ஷீஜா, ஆகியவர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்பைடயில் எதிரி ஆஜர் படுத்திய நான்கு ஆணுறை பாக்கெட்டுகளை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி வழக்குச்சொத்து, எதிரி மற்றும் பாதிக்கப்பட்ட பெண்கள் சகிதம் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 138/2023 பிரிவுகள் 3(1), 4(2), 5(2)(D) ITP Act மற்றும் பிரிவு 370(2) இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1. அத்தாட்சி அ.சா.ஆ.2. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரியின் வீட்டிற்கு செல்லவில்லை என்றும், அங்கு வழக்குச் சொத்து எதையும் கைப்பற்றவில்லை என்றும், பாதிக்கப்பட்ட

பெண்களையும் அழைத்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்றும் சம்மந்த மில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC.270 /2023**

**Deposition of P.W.** 2

Name : அனிற்றா

S/o, D/o, W/o : ஆல்டிரின் ஆனந்த்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 22**.10.2025

**Accused** absent. peittion filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் தக்கலை பாரதிநகரில் வசித்து வருகிறேன். ஆசிரியையாக வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியான ரவீந்திரன் நாயர் என்பவரை தெரியும். எங்களுக்கு சொந்தமாக ரீங்காரவிளையில் கதவு எண் 28/182 என்ற வீடு சொந்தமாக இருந்தது. அதனை 17.09.2021ம் தேதி எதிரி வாடகைக்கு கேட்டார். வாடகை ரூ.5,000/– முன்பணம் ரூ.40,000/– பெற்றுக்கொண்டு ரவீந்திரன் நாயருக்கு அந்த வீட்டை வாடகைக்கு கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் வாடகை ஒப்பந்தங்கள் எனக்கும், ரவீந்திரன் நாயருக்கும் ஏற்பட்ட வாடகை ஒப்பந்தங்கள் தான். அது அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5. 29.06.2023ம் தேதி ரவீந்திரன் நாயர் விபசார வழக்கில் கைதாகி போனது என்று தகவல் கிடைத்தது. நான் உடனடியாக அந்த வீட்டை காலி செய்து என் வசம் பெற்றுக்கொண்டேன்.

போலீசார் என்னை விசாரித்தார்கள்

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சொன்ன விபரங்கள் போலீசார் சொல்லி கொடுத்தார்கள் என்றால் சரிதான். எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.